1973 நவம்பர் 29]

தோக்கமூர் ஊராட்சி பர்மா குடியிருப்பில் தெரு விளக்குகள்

*500 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், தோக்கமூர் ஊராட்சியில் உள்ள பர்மா காலனிக்குத் தெரு விளக்குகள் அமைப்பதில் காலதாமதம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பர்மாகுடியிருப்பு, சென்னை, மின்வசதி ஏற்பாட்டின் சிறப்புத்திட்டம் நிறைவேற்றப்பட்ட 1971-ம் ஆண்டிற்குப் பிறகு ஏற்படுத்தப்பட்ட புதியதொரு குடியிருப்பாகும். பர்மா குடியிருப்புக்கும் சேர்த்து 16 தெரு விளக்குகள் அமைக்குமாறு கேட்டு செல்வநிலைச் சான்றிதழுடன் (Salvancy Certificate) தோக்கமூர் ஊராட்சித் தலைவர் 1972-ம் ஆண்டு மார்ச் திங்களில் விண்ணப்பம் செய்தார். இத்திட்டத்தின் மூலம் 9.3 சதவீத வருவாயே கிடைக்குமாதலால் இத்திட்டம் ஆதாயம் தரத்தக்கதாக இல்லையென்று தெரிய வந்தது. எனவே, வேளாண்மைப்பணிகள் உட்பட இணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது. இத்திட்டத்தில் தற்போதுள்ள 5 சாதாரண விளக்குகளை ஒளி உமிழும் குழல் விளக்குகளாக மாற்றுவதும் சேர்க்கப்பட்டிருந்தது. திருத்தியமைக்கப்பட்ட செல்வநிலைச் சான்றிதழ் ஒன்று ஊராட்சி ஒன்றிய ஆணையாளரால், 1972-ம் ஆண்டு நவம்பர் திங்களில் கொடுக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், இந்த மாத இறுதிக்குள் விளக்குகள் போடுவதாயும், தற்போது தமிழ் நாடு மின்வாரியம் தெரிவித்துள்ளது. பணிகள் நடந்து கொண்டிருப்பதாக மாவட்ட ஆட்சியாளரும் தெரிவித்துள்ளார்.

மணல்மேடு-வக்காரமாரி சாலை

*501 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் மணல்மேட்டிலிருந்து வக்காரமாரி வரை செல்லும் பாதையைச் செப்பனிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : மாயூரம் தொகுதி மணல்மேட்டிலிருந்து வக்காரமாரி வரை செல்லும் பாதை சீர்கேடாக இருக்கிறது. பொதுமக்கள் இதுபற்றி பல ஆண்டுகளாக கோரிக்கை எழுப்பிவருகிறுர்கள். இனிமேலாவது அதைக் கவனித்து அரசு உத்தரவு வழங்கி, அதற்கு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மாயூரம் மணல்மேடு முதல் வக்காரமாரி வரை செல்லும் சாலையில் மொத்த நீளம் 2.00 கிலோ மீட்டர். இது மணல்மேடு முடிகொண்டான் ஊராட்சி சாலையாகும். இச்சாலையைச் செப்பனிட தோராயமாக ரூ. 65,000 செலவாகும். இவ்வேலையின் மொத்த செலவு ரூ. 40,000-க்கு மேல் உள்ளதால் இதை 'இதரச் சாலைகள்' என்ற தலைப்பில் எடுத்துச் செயல்படுத்த வேண்டியதாகும். ஆனல் இவ்வேலை எந்த ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டத்திலும் இடம் பெறவில்லை. 'இதர சாலைகள்' தலைப்பில் ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட வேலைகளில் பெரும்பாலானவையை நிதிப் பற்றுக்குறை நிமித்தம் செயல்படுத்த இயலவில்லை. எனவே, இவ்வேலையானது வளமான காலம்வரை பொறுத்துக்கொள்ளப்பட வேண்டியதாகும்.

பொட்டல் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***502 வின—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினைக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த பொட்டல் ஊரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட 1963-ம் ஆண்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டும் இன்னமும் அந்த நீர்த்தேக்கம் கட்டி முடிக்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?